# வவுனியாவில் தாக்குதல் தொடரபடையினர் அச்சம்

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | ஆனி 10 | துல்ஹஜ் 11 | இதழ் 133

யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 24-06-1991

## இராணுவ நடவடிக்கை நிறுத்தம்

(வவுனியா)

வவுனியா - மன்னார் வீதியில் தொடர்ந்து பன்னிரண்டு நாட்களாக விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்குமிடையில் இடம்பெற்ற மோதல் இராணுவத்தினரின்

(4-ம் பக்கம் பார்க்க)

## தற்கொலைப் படை தாக்குதல்: 300 பேரின் சாட்சியங்கள் பதிவு

(சொழும்பு)

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகத்தின் முன்பாக நடைபெற்ற குண்டு வெடிப்பு சம்பந்தமாக இதுவரை 300 பேரின் சாட்சியங்கள் நேற்று

(4ம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் நடத்தியவரின் பாதம் கண்டுபிடிப்பு

[கொழும்பு]

கொழும்பிலுள்ள கூட்டுப் படைத்தலைமையகம் மீது தற்கொலைப் படைத்தாக்குதல் நடத்தியவரின் பாத மேற்பகுதி நேற்று கண்டுபிடிக்கப் பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

# ★ ஒரு துப்பாக்கியுடன் ஆரம்பமான போராட்டம்

# வாகனகுண்டுத்தாக்குதலுடன்

# தெற்குவரை ஊடுருவியுள்ளது!

## கம்புறுப்பிட்டியில் ஜனாதிபதி

(மாத்தறை)

**வடக்கு கிழக்குப் பகுதியில் ஒரு துப்பாக்கியுடன் ஆரம்பமான போராட்டம் இன்று வாகனத்தில் வெடிகுண்டுகளை வைத்து வெடிக்கச் செய்யும் அளவுக்கு வியாபித்திருக்கின்றது. மேலும் அன்று வடக்கு கிழக்குப் பகுதியில் ஆரம்பமான போராட்டம் நாட்டில் முழுப்பகுதிகளுக்கும் இன்று பரவியுள்ளது.**

**வடக்கு கிழக்குப் பிரச்னையை சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமாகவே தீர்க்க விரும்புகிறேன். எவருடைய அச்சுறுத்தல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் அஞ்சி இந்தப் பிரச்னைக்கு சமாதான தீர்வை காண்பதில் நான் பின்னடையவும் மாட்டேன்.**

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா இவ்வாறு கூறினார்.

நேற்று மாத்தறை மாவட்டத்திலுள்ள கம்புறுப்பிட்டிய என்ற இடத்தில் நடைபெற்ற 'கம் உதாவ' வைபவத்தில் பேசியபோது அவர் மேலும் கூறியதாவது:

எமது நாட்டிலுள்ள பிரச்சனையைத் தீர்த்துக்கொள்வதற்கு நான் வெளிநாட்டு உதவியை நாடமாட்டேன். எந்த ஒரு வெளிநாட்டுராணுவத்தை

[4ம் பக்கம் பார்க்க]

## ஆயுதம்தாங்கிய பிரபல கொள்ளையர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

வருடக்கணக்கில் கொள்ளையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கொள்ளைக் கோஷ்டியினர், விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## பலாலியிலிருந்து ஷெல் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

பலாலி இராணுவ முகாமிலிருந்து கட்டுவன் சந்தியை நோக்கி நேற்றுக் காலை கடும்

[4ம் பக்கம் பார்க்க]

## வீரவணக்கம்

[யாழ்ப்பாணம்]

கட்டுவனில் நேற்று நடைபெற்றநேரடி மோதலில் 2வது லெப். ரவிராஜ் [சின்னராசாதவராசா, கும்பளாவளை அளவெட்டி] வீரமரணமடைந்தார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். (க)

## பாதுகாப்பு கேந்திர நிலையங்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்வு?

(கொழும்பு)

கொழும்பில் உள்ள பாதுகாப்புக் கேந்திர நிலையங்களைப் பாதுகாப்பு கூடிய இடங்களுக்கு மாற்றியமைப்பது குறித்து அரசு தற்போது தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தையில் உள்ள கூட்டுப் படைத் தலைமையகம், தற்கொலைப் படையால் தகர்க்கப் பட்டதையடுத்தே இதுகுறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி இருக்கிறது.

(4ம் பக்கம் பார்க்க]

## 21 பொதுமக்கள் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றகுண்டு வெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் 21 பேர் பொது மக்கள் என அரசின் அதிகார

[4ம் பக்கம் பார்க்க]

## தமிழக அமைச்சரவை இன்று பதவியேற்பு

(சென்னை)

தமிழகத்தில் அ. இ. அ. தி. மு. கழக தலைவி செல்வி ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவை இன்று திங்கட்கிழமை காலை பதவியேற்கும்

செல்வி ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவையின் விபரம் வருமாறு: திருவாளர்கள்: இரா நெடுஞ்செழியன்,

[4-ம் பக்கம் பார்க்க]

## புலிகளின் தாக்குதலில் நிலைகுலைந்து இராணுவம் பின்வாங்கியது

[வவுனியா]

வவுனியா மாவட்டத்தில் பிராமணலங்குளத்தில் நிலை கொண்டிருந்து தாக்குதலை நடத்திய சிறிலங்கா படையினர் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் செட்டிகுளம் முகாமுக்கு பின்வாங்கி சென்றுள்

(4ம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை: கொலையாளிகளைப் பிடிக்க விசேட அதிரடிப்படை

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை தொடர்பாகத் தேடப் பட்டுவரும் ரகுபரன் என்ற சிவராசன், சுதா ஆகியோரைப் பிடிப்பதற்கு விசேட அதிரடிப் படையொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நவீன ஆயுதம் தாங்கிய இந்தப் படையினரை, இந்தியப் புலனாய்வுப் பிரிவு நியமித்துள்ளது.

மேற்படி கொலையாளிகள் தொடர்ந்து சென்னையிலேயே தங்கியிருப்பதாக மத்தியவிசாரணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## சரத்பவார் நியமனம் நிராகரிப்பு

(புதுடில்லி)

இந்திய உள்துறை அமைச்சராக மகாராஷ்டிர மாநில முன்னாள் முதல்வர் திரு. சரத் பவார் பதவியேற்கமாட்டார் என தெரிய வந்துள்ளது.

முன்னர் இப்பதவிக்கு திரு. சரத்பவாரையே நியமிக்கப் போவதாக அறிவிக்கப்பட்ட போதும் இந்நியமனத்தை பிரதமர் திரு. பி. வி. நரசிம்ம ராவ் நிராகரித்துவிட்டார் என அறிவிக்கப்பட்டது. (க)

## நஷ்டஈடு கோரி 1734 விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வன்செயல் காரணமாக ஊனமடைந்தவர்களிடமிருந்து நஷ்டஈடு கோரி இதுவரை 1734 விண்ணப்பங்கள் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகு

(4-ம் பக்கம் பார்க்க)

## தீவிரவாதிகளை வெளியேற்ற இரண்டு கட்ட திட்டம்

(சென்னை)

தமிழகத்தில் இருந்து தீவிரவாதிகளை வெளியேற்றுவதற்கு இரண்டு கட்டத் திட்டம் கொண்ட யோசனை ஒன்றை இந்திய இணை அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இதன் முதலாவது கட்டமாக 1983முதல் 1987 காலப்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நாடக நூல்கள்

''இன்று தமிழில் வானொலி நாடகம் எழுதுபவர்களில் தலை சிறந்தவர்'' என்று விமர்சகர் K. S.சிவகுமாரனால் பாராட்டப்பட்ட அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் 19 நாடகங்கள்: கெட்டிக்காரர்கள் 35/- முதலாம்பிள்ளை 30/-
(சி-4894)

### வெளிவந்துவிட்டது

வரலாறும் சமூகக் கல்வியும் ஆண்டு 10, துரித மீட்டலுக்கான வினாவிடை ஆக்கம்: ச. சந்திரசேகரம், (ஆண்டு II மாணவர்களுக்கும் பயன்படக்கூடியது). (ஏ 1400)

### தேர்த்திருவிழா

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் வெள்ளருவைப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலையும் நாளை மறுதினம் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

### பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையில் உள்ள II ஆம் வகுப்பிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைதிறமைகாண்தடைப் பரீட்சை ஜூலை மாதம் 27ந் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது. (153)


### பீரங்கி தாக்குதல்

(பண்டத்தரிப்பு)

ஸ்ரீலங்கா கடற்படையின் விசைப்படகிலிருந்து கடந்த வெள்ளி காலைசுழிபுரம் மேற்கு புளியந்துறையை நோக்கி சரமாரியான பீரங்கி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. இத்துறையில் கட்டுமரத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவர்கள் கடலுக்குள் விழுந்து நீந்தியதினால் காயமெதுவுமின்றி தப்பினர்கள். (72)

# திருநெல்வேலிதாக்குதலில்பிரபாகரன் 7 இராணுவத்தை சுட்டுக்கொன்ருர்!

(விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் முத்தமிழ் விழா மலரில் வெளிவந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் 'இரண்டு தசாப்தங்களும் புலிகளும்' என்ற கட்டுரை தொடர்ச்சியாக இங்கு தரப்படுகிறது.)

(நேற்றைய தொடர்ச்சி)

தமிழீழத் தனியரசு அமைப்பதற்கு தமிழ் மக்களிடம் ஒப்புதல்பெற்று கொழும்புப் பாராளுமன்றத்திற்குள் நுழைந்கொண்ட கூட்டணி, மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்கும் அளவிற்கு கீழிறங்கியது இந்த மாவட்ட சபைத் தேர்தலுக்கு முதல் நாள் இரவு, 1981 மே 31ஆந் திகதி, யாழ்ப்பாணத்தில் சிங்கள ஆயுதப்படைகள் வெறியாட்டம் ஆடி யாழ் நகரை தீயிட்டுக் கொழுத்தியது. யாழ். நூல்நிலையமும் அதிலிருந்த வரலாற்றுக் கலாசார பொக்கிஷங்களும் தீவைத்து அழிக்கப்பட்டன. ஜெயவர்த்தனாவின் மூத்த அமைச்சர்களான சிறில்மத்தியூவும், காமினி திசநாயக்காவும்யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து இந்த நாசவேலையைச் செய்துமுடித்தனர். யாழ்ப்பாண தீவைப்பை அடுத்து சரியாக மூன்று மாதங்களின் பின்னர் இலங்கைத்தீவு பூராகவும் தமிழருக்கெதிரான இனக்கலவரம் வெடித்தது. நூற்றுக் கணக்கில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். கோடிக் கணக்கில் தமிழர் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.

அரச வன்முறை தீவிரமாக, விடுதலைப் புலிகளின் ஆயுத எதிர்ப்பியக்கமும் அதி தீவிர மடைந்தது.

1981 அக்டோபர் 15ந் திகதி, சாள்ஸ் அன்ரனி, சீலன் தலைமையில் விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையணி ஒன்று யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை வீதியில் இராணுவ ஜீப் வண்டி ஒன்றைத் தாக்கி இரு இராணுவத்தினரை அழித்தனர் சிங்கள இராணுவத்துக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய முதலாவது கெரில்லாத் தாக்குதல் இதுவாகும்.

1982 ஜூலை 2ந் திகதி நெல்லியடியில் ரோந்துசென்ற பொலிஸ் ஜீப்வண்டிமீது திடீர் தாக்குதல் நடத்திய புலிகள் நான்கு பொலிஸாரைக்கொன்றனர்.

1982 அக்டோபர் 27ந் திகதி விடுதலைப் புலிகளின் கெரில்லா அணி ஒன்று சாவகச்சேரி பொலிஸ்நிலையம்மீது வெற்றிகரமான தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலில் மூன்று பொலிஸார் கொல்லப்பட்டனர். மூவர் படுகாயமடைந்தனர். பொலிஸ்நிலைய ஆயுதக் களஞ்சியத்திலிருந்து பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இவ்விதம் எண்பதின் ஆரம்பத்தில் முனைப்புற்ற புலிகளின் ஆயுத எதிர்ப்பியக்கம் 83இல் மேலும் தீவிரமடைந்தது.

இது இவ்வாறிருக்க, தமிழர் பிரச்சினைக்கு தீர்வுத் திட்டமாக, அதிகாரப் பரவலாக்கத்தின் அத்திவாரமாக கூட்டணியால் சிங்கள அரசிடமிருந்து பெறப்பட்ட மாவட்டசபை, அதிகார வறுமையால் செயலிழந்து செத்துப்போனது. இந்த நிலையில், 1983 மே 18ந் திகதி வடக்கில்உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதென அரசு அறிவித்ததும் தேர்தல் களத்தில் குதிக்க கூட்டணியும் மற்றும் சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளும் முன்வந்தன. வடக்கில் தாண்டவமாடும் அரச பயங்கரவாதத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு விடுதலைப் புலிகள் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டனர்.

வடக்கில் அரசின் கைப்பொம்மைகளாகச் செயல்பட்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரும், ஆதரவாளர்களும் விடுதலைப் புலிகளின் எச்சரிக்கையைமீறி தேர்தலில் குதிக்க முற்பட்டதால் இவர்களில் மூவரை விடுதலைப்புலிகள் சுட்டுக் கொன்றனர். ஒரே நாளில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து ஐ. தே. கட்சியின் சார்பில் நின்ற சகல தமிழ் வேட்பாளர்களும் தேர்தலிலிருந்து வாபஸ் பெற்றதுடன் பல தமிழர்கள் ஐ. தே. கட்சியிலிருந்தும் ராஜினமாச் செய்தனர். புலிகளின தீவிர அரசியல் பிரச்சாரத்திற்குச் செவி சாய்த்த வடமாகாண மக்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பூரணமாய்ப் பகிஷ்கரித்தனர். இந்தப் பகிஷ்கரிப்பு அரசியல் ரீதியில் புலிகளுக்குக் கிட்டிய மகத்தான வெற்றியாக அமைந்தது. புலிகளின் வேண்டுகோளை நிராகரித்துத் தேர்தலில் நின்ற கூட்டணியினர் சகிக்கமுடியாத அவமானத்தைத்தேடிக் கொண்டனர். தேர்தலில் சந்தித்த தேல்வியுடன் கூட்டணி செல்லாக்காசாக மாறியது. இத்துடன் தமிழீழ அரசியல் அரங்கிலிருந்து கூட்டணியின் உதயசூரியன் நிரந்தரமாக அஸ்தமித்தது.

தமிழர் வரலாற்றில் கொந்தளிப்பு மிகுந்த காலகட்டமாக 1983 - யூலை மாதம் அமைந்தது. ஒரு சம்பவம் சங்கிலித் தொடர்பாகப் பல நிகழ்வுகளை விளைவித்துப் பாரிய அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தி போராட்ட வரலாற்றின் ஓட்டத்தை முனைப்படுத்தும்வகையில் அமைந்த தென்றல் அது யூலை 23-ஆந் திகதி திருநெல்வேலியில் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதல் சம்பவமாகும். சிங்களப்பேரினவாதத்தைப் பேரதிர்ச்சியில் ஆழ்த்திய இத்தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இந்த அதிரடித் தாக்குதலைத் திட்டமிட்டு அதில் பங்குகொண்ட பிரபாகரன் தனது கையால் ஏழு இராணுவத்தினரைச் சுட்டுக் கொன்ருர். தமிழீழத்தில் கூடிய தொகையில் சிங்களப் படையினர் கொல்லப்பட்ட முதல் சம்பவம் இதுவாகும்.

'பயங்கரவாதத்தை பூண்டோடு அழிக்கப்போவதாக மாறி மாறி முழங்கிக்கொண்டிருந்த ஜெயவர்த்தன அரசுக்கு இந்தத் தாக்குதல் சம்பவம் முகத்தில் ஓங்கி அறைந்ததுபோல் இருந்தது. புலிகள் இயக்கத்தின் தலைமையில் புரட்சிகர ஆயுதப் போராட்டம் ஒரு திண்ணியமான வடிவத்தையும், காத்திரமான வளர்ச்சியையும் பெற்றுவருகிறது என்பதைத் தமிழ்மக்களுக்கு இந்தத் தாக்குதல் சம்பவம் உணர்த்தியது.

இந்தச் சம்பவத்தின் அதிர்ச்சி அலைகள் தென்னிலங்கையில் பரவியபோது அதனைத் தமிழருக்கு எதிரான இனக்கிளர்ச்சியாக மாற்றிவிட்டு, கொழும்பில் நிலைகொண்டிருந்த தமிழரின் பொருளாதார ஆதிக்கத்தை நாசமாக்கிவிடச் சிங்கள அரசு திட்டமிட்டது.

**கலாநிதி அன்ரன் பாலசிங்கம்**

நாளை:- புலிகளின் வளர்ச்சி இந்தியாவை எவ்வாறு அச்சுறுத்தியது?


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
1939 - 11 - 30



உதிர்வு
1991 - 05 - 25

### அமரர் புதியாக்குட்டி கோகுலதீபம்
(தீபம்)

திதி: 1991 - 06 - 24

பண்பான கணவனாய்
இதய தீபமாய்
சதீபனின் அன்புத் தந்தையாய்
பெற்றோருக்கு மூத்த புதல்வனாய்
அன்பான சகோதரிக்கு பாசம்
நிறைந்த சகோதரனாய் வாழ்ந்து
எங்களைப் பரிதவிக்க விட்டு
நீ நிம்மதியாய் உறங்கிவிட்டாய்
உம் நினைவு எம்மைவிட்டு என்றும் அகலாது.

எமது இல்லத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், உறவினர்.

கரவெட்டி. (சி 4889)


## இராசி பலன்

24-06-1991
திங்கட்கிழமை

திரயோதசி: பி. இ. 5.08 வரை.
விசாகம்: காலை 6.12 வரை
மரணயோகம்: இராகு காலம், காலை 7.25 முதல் 8.55 வரை.
சுபநேரம்: காலை 11.55 முதல் 1.25 வரை.

மேடம்: வேலைப்பளு, அந்நியர் தொல்லை, மனக்குறை.
இடபம்: ஆதாயக்குறைவு, அவசர புத்தி, ஆசாரமின்மை.
மிதுனம்: மனக்களிப்பு, தொழில் பிரயாசம், செலவு.
கடகம்: கடன் வாங்கல், குடும்பவிரோதம், வெறுப்பு.
சிங்கம்: பணியாள் துன்பம், குடும்ப சிக்கல், மாமனார் பிரச்னை.
கன்னி: மகிழ்ச்சியான சம்பவம். குடும்ப உறவு, பொதுத்துறை ஈடுபாடு.
துலாம்: இடமாற்றம், குறைகேட்டல், வசதிக்குறைவு
விருச்சிகம்: சயனசுகம், தொழில்வெற்றி, விருந்து.
தனுசு: பண நிலை தகராறு, அகம்பாவம், களைப்பு,
மகரம்; வியாபார முன்னேற்றம், உறவினர்வருகை, புகழ்.
கும்பம்: மனையாள் வெகுமதி, புத்திரர் சிறப்பு, தெய்வீக செலவு.
மீனம்: அரசநிர்ப்பந்தம், தொழில்பாதிப்பு, யோசனை.

- ஜோஸ்யர்


## 45- நாள் நினைவஞ்சலி



### 2-வது லெப்டினன் டியூட்சன்
(சிவப்பிரகாசம் கிறேசியன்)

தமிழீழ மண்ணில்: 14-08-1973
தமிழீழ மீட்பில்: 11-05-1991

எதிரிகள் பாசறையைத் தேடிச் சென்று
எத்தர்களின் துடுக்கடக்கி
வன்னிமண் சிவக்க–இந்த
வண்டமிழ் வீரன் களம் சாய்ந்தான்!
இவன் வழியில்,
இவன் விட்ட பணி தொடர
வேங்கையணி திரண்டிடுவோம்
இவன் கனவை நாம் முடிப்போம்!


குடும்பத்தினர், நண்பர்கள்

பெரியமாவடி.
சாவகச்சேரி. (ஏ 1401)

# மூளாய்
# சித்திவிநாயகர் முத்துக்குமாரசுவாமி

## தேர்த்திருப்பணிச் சபையின் வேண்டுகோளுக்கிணங்கி, திருநெல்வேலி சிற்பாலய உரிமையாளர் ஸ்தபதி ஆ. ஜீவரத்தினம் அவர்களால் உருவாக்கப்பட்ட சிற்பத் தேர் வெள்ளோட்டம்







# இன்று
# சித்திரத்தேர் வெள்ளோட்டம்!

யாழ்ப்பாண மாநிலத்து வலிமேற்குப் பகுதியில் மருதமும் நெய்தலும் இணைந்து, பல வளங்களும் சீரும் சிறப்புமுடைய கிராமம் மூளாய்ப் பதியாகும். அக்கிராமத்தில் வரதன் புலோ என்னும் புண்ணிய புனித பூமியில் இணைபிரியா அண்ணனும் தம்பியுமாகிய விநாயகப் பெருமானும் முருகப்பெருமானும் மூல மூர்த்திகளாக இறையருள் பாலித்து விளங்கும் ஆலயங்கள் விநாயக முருகன் ஆலயங்களாகும்.

இந்த ஆலயங்களின் மூல மூர்த்திகளான விநாயகமுருகனுக்கு அடியார்களின் அன்பளிப்பினால் திருநெல்வேலி ஆறுமுகம் ஜீவரத்தினம் ஸ்தபதியார் அவர்கள் ஓர் அற்புதமான கலை நிறைந்த புதுமை விளங்கும் சித்திரத்தேரை உருவாக்கியுள்ளார். இச்சித்திரத் தேரின் வெள்ளோட்ட விழா 24-06-91 ஆனித்திங்கள் இன்று நடைபெற இறையருள் பாலித்தமை கண்டு அடியார்கள் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இப்புதிய புனித சித்திரத் தேரின் அடித்தளம் தாமரைப்பூ வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது. எட்டுத் திக்கும் நோக்க எண்கோண வடிவில் அமைந்த தேரில் ஈர்ப்பு மையம் என்னிலையிலும் சமநிலைப்படுத்தும் முகமாக சமச்சீருக் கமைய ஆறு சில்லுகள் பூட்டப்பட்டுள்ளன. நட்டுப்பார் எல்லாம் பூதகணங்கள் தாங்கி நிற்க மருதமரத்தில் என்றும் நிலைபெற இரும்பு அச்சுகள் பூட்டப்பட்டுள்ளன.

இறைவனின் சக்திகளான 24 க்கு மேற்பட்ட திருவுருவ தோற்றங்கள் உயிர் ஓவியங்களாக கலை நிறைந்த. இறைசக்தி மிளிர, காட்சி கொடுக்கின்றன. விநாயகப் பெருமானது திருவுருவமாகிய மகாகணபதி தேரின் மையத்தில் அமைத்து அருள் பாலிக்கின்றார்.

## சிறப்பு மலர்

மேலும் ஓம் என்னும் பிரணவத்தை உள்ளடக்கிய ஓம் கணபதி, பஞ்சமுக விநாயகர், சித்திபுத்தி கணபதி, பஞ்சகிருத்திய நடனஞ் செய்யும் சந்திரசிஷாமிக மூர்த்தி. காவேரி ஆறு பெருக அகத்தியர் கமண்டலத்தை காக்காப்பிள்ளையார் சரித்த சரித்திரம், விநாயகர் பாரதம் எழுதிய சரித்திரம், ஆலயமூல மூர்த்தியாகிய சித்திவிநாயகர் வரலாறு ஆகிய திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேபோல முருகப்பெருமானது திருவுருவங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. ஓம் என்னும் மந்திரத்தை உள்ளடக்கிய ஓம் முருகா, ஒரு மாம்பழத்துக்காக ஆண்டியான பழனி முருகன், சரவணப்பொய்கையில் கார்த்திகைப்பெண்களால் அரவணைத்த ஆறு முகங்கள் ஒருமுகமாகியது, தாயின் சக்தியில் மிக்கதொரு சக்தியில்லையென்பதற்கமைய சக்தி கொடுத்த வேல், ஓம் என்னும் மந்திரத்தைத் தந்தைக்கு உபதேசம் செய்தமை, ஆறுமுகசுவாமி திருப்பரங்குன்றத்தில் தெய்வயானை கல்யாணம், கந்த சஷ்டி மகிமையை விளக்கும் சூரசங்காரம் போன்ற முருகன் பெருமைகளை விளக்கும் விக்கிரகங்கள் அமைந்துள்ளன. மேலும் சைவ சமயத்தின் தத்துவங்களை அடக்கிய பலசக்தி உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. சிவன், பார்வதி, சரஸ்வதி, இலட்சுமி, அம்பாள், மகாவிஷ்ணு அனந்த சயனம், வைரவர் ஆகிய தெய்வீக திருவுருவங்களும் அமைக்கப்பெற்றுள்ளன. இவற்றோடு தேரின் அமைப்பு அழகு பெறவும், தத்துவங்கள் விளங்கவும் கம்பீரமான தோற்றமளிக்கவும் ஆறு அடி உயர யாழிகள் எட்டுத்திக்கும் பார்வை செலுத்தி சீரிய தோற்றமளிக்கின்றன. இவற்றோடு மேலும் யாழிகள் 16, குதிரைகள் 8, மகரயாழிகள் 8, சிறகு குதிரைகள் 8, அன்னப் பறவைகள் 12, தேரில் கொலுவீற்றிருக்கின்றன. இதன் மேல் 6 கால்களின் கூட்டமாய் எட்டு பவளக் கால்கள் மேற்கோபுரத்தைத் தாங்கி நிற்கின்றன. பந்தல் வேலைகள் சொக்கட்டான் பந்தலாக அமைந்துள்ளது. அப்பகுதி தேவலோகமா என்று பார்ப்போர் வியக்க வர்ணம் தீட்டிய சிற்பியின் திறமை முழுமையாகக் காட்சி கொடுக்கின்றது. திருத்தொங்கல்கள் அழகு மிளிர, வாகை மாலைகள் அசைந்தாட, மணிகள் ஒலிக்க நான்கு குதிரைகளைப் பிரமா சாரதியாகச் செலுத்தும் காட்சி பார்ப்போர் மனதைக்கவர வல்லது.

தேரின் மேல்வேலை எழுதகம் என்னும் வளைவினால் மாத்திரம் செய்யாது புதிய முறையில் வர்ணவேலைகள் அமைத்து புதிய தோற்றமளிக்கின்றது. பழைமையில் தேருக்கு சேலை கட்டும் வழமைநிலை நட்ட பஞ்சவர்ணசேலை, றேந்தைகள் 5 வரிகளுக்குக் கட்டப்பட்டு பழமையும் புதுமையும் நிறைந்து கண் கொள்ளாக் காட்சியாகத் திகழுகின்றது.

திருமாலுக்கு அருள் பாலித்த விநாயகனே சித்தி விநாயகன். இச்சித்தி விநாயகனே வரதன்புலோ சித்தி விநாயகனுவான். சித்திரத்தேர் பவனிவரும் போது எழுந்தருளி மூர்த்தியாக பஞ்சமுகவிநாயகரே எட்டுத்திக்கும் ஏக காட்சி கொடுத்து பவனி வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். அடியார்கள் அனைவரும் அவ்வருள்பெறுவோமாக.

அதேபோன்று முருகன் உற்சவ காலத்தில் சித்திரத் தேர் பவனி வரும்போது வள்ளி தெய்வானை சமேதராய் முருகப்பெருமான் அடியார்களுக்கு அருள் பாலித்து அருள்பெறுவோமாக.

**தேர்த்**
**திருப்பணிச்சபை**

(சி 4895)

# நரசிம்மராவ் ஆட்சி ஐந்து வருடங்களுக்கு தாக்குப்பிடிப்பதுசந்தேகமே!

## — வாஜ்பாய்

(புதுடில்லி)

''திரு. பி. வி. நரசிம்மராவ் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் தொடர்ந்து 5 வருடங்களுக்குத் தாக்குப்பிடிக்குமா என்பது சந்தேகமே''.

பாரதிய ஜனதாகட்சித் தலைவர் திரு. அட்டல்பிஹாரி வாஜ்பாய் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

தமது கட்சி அடுத்த தேர்தலைச் சந்திக்கத் தயாராகவுள்ளதா எனக்கேட்கப்பட்டதற்கு தமது கட்சி எதற்குமே தயார் என வாஜ்பாய் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

# குண்டுவெடிப்பின் விளைவு: றேயல் கல்லூரியில்

## வகுப்புகள் நடைபெறமாட்டா

[கொழும்பு]

கொழும்பு றேயல் கல்லூரியில் இன்று திங்கட்கிழமையும் நாளை செய்வாய்க்கிழமையும் வகுப்புக்கள் நடைபெறுதென அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைப்படைத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட கூட்டுப்படைத் தலைமை அலுவலத்தின் அருகில் றேயல் கல்லூரி அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய அமைச்சர்கள் இன்று பதவியேற்பு

(புதுடில்லி)

இந்திய மத்திய அரசு அமைச்சர்கள் இன்று திங்கட்கிழமை பதவியேற்கிறார்கள்.

இந்தியாவில் கடந்த வெள்ளிக்கிழமை சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட இந்திய யூனியன் அமைச்சர்கள், சுதந்திரப் பொறுப்புள்ள இராஜாங்க அமைச்சர்கள், இணை அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் ஆகியோருக்கான இலாகாப் பொறுப்புகள் நேற்று வழங்கப்பட்டன.

இவர்கள் தமது பொறுப்புக்களுடன் இன்று தமது அலுவலகங்களில் பதவியேற்கிறார்கள்.

# 6000 ரூபா அபராதம்

[நாவற்குழி]

ஒருமுறை எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னரும் தொடர்ந்து ஷம்பூ கலந்த தேங்காய் எண்ணெய்மூலம் வடைசுட்டு சுகாதாரச் சீர்கேடான முறையில் வியாபாரம்செய்தசாவகச்சேரிகண்டிவீதியிலுள்ள தேநீர் கடை உரிமையாளர் ஒருவருக்கு விடுதலைப்புலிகள் 6000 ரூபா அபராதம் விதித்தனர். [107]

# இன்று சித்திரத்தேர் வெள்ளோட்டம்

[யாழ்ப்பாணம்]

மூளாய் சித்திவிநாயகர் முத்துக்குமாரசுவாமி ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது. [க]

## வவுனியாவில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

படுதோல்வியை அடுத்து நேற்று முன் தினம் சனிக்கிழமை நிறுத்திவைக்கப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன,

இம்மோதல்களின்போதுபுலிகளின் உக்கிரமான தாக்குதலையடுத்து பல கட்டடங்களில் இராணுவத்தினருக்கு பின்னடைவு ஏற்பட்டது.

இத்தாக்குதலின்போது 75க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கும் அதிகமான படையினர் காயமடைந்ததுடன், ஹெலிகொப்டர் ஒன்றும் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பலத்த தோல்வியின் மத்தியில் பின்வாங்கிய சிறிலங்கா இராணுவத்தினர் பாவற்குளம், செட்டிகுளம் முகாம் நோக்கி கடந்த சனிக்கிழமை திரும்பிக் கொண்டிருந்தனர்.

புலிகளின் பலமான தாக்குதல் மத்தியில் தம்மால் எதிர்த்துப்போரிட முடியாதிருப்பதாக இராணுச்சிப்பாய்கள் இச்சண்டை தொடங்கிய நாளிலிருந்து தமதுதலைமைப்பீடத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டதையடுத்து வவுனியா பகுதியில் அமுல்செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் நீக்கப்படவுள்ளது.

# யுத்த நிறுத்தம் அமுல்

(லண்டன்)

கம்போடியாவில் இன்று முதல் யுத்தநிறுத்தம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கை மூலம் கடந்த 12 வருட காலமாக நடைபெற்றுவரும் சிவில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்போடிய பிரதமர், உயர்மட்டத்தலைவர்கள் மற்றும் கிளர்ச்சிக்குழுத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்ட மாநாட்டிலேயே மேற்படி முடிவு அறிவிக்கப்பட்டது.(க)

## தமிழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கே. எஸ். கிருஷ்ணசாமி, எஸ். ரி. சோமசுந்தரம், ஆர். எம். வீரப்பன், ராஜாராம், கே. அரங்கநாயகம், எஸ். முத்துச்சாமி, கே. எஸ். செங்கோட்டையன், மதுசூதனன், எஸ். கண்ணப்பன், அழகு. திருநாவுக்கரசு, ரூபா கிருஷ்ணன், சி.எம். செல்வகணபதி, முகமது ஹாசிம், திருமதி இந்திரகுமாரி, எம். ஆனந்தன், வி. ஜெயக்குமார் ஆகியோராவார்.

இவர்களுள் திருவாளர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. எஸ். கிருஷ்ணசாமி, எஸ். ரி. சோமசுந்தரம், ஆர்.எம்.வீரப்பன், ராஜாராம், கே அரங்கநாயகம், எஸ். முத்துச்சாமி ஆகியோர் எம். ஜி. ஆர். அமைச்சரவையில் அங்கம் வகித்து அனுபவம் பெற்வர்கள் என்பது குறிப்பிடத்தக்கது, (பூ-க)

## தீவிரவாதிகளை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதியில் செய்ததுபோலக் குறிப்பிட்ட சில அகதி முகாம்களுக்கு, அகதிகள் என்று இனம் காணப்படுபவர்களை அனுப்பிவைத்தல்.

அடுத்தது ஒவ்வொரு அகதியையும் ஆராய்ந்து, அவர்களில் எவரிலாவது சந்தேகம் இருப்பின் அவரை உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற இரு யோசனைகளுமே இவையாகும்.

## தாக்குதல்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த தாக்குதல் நடவடிக்கைக்கு நீலநிறஇசூஸ்ரகவாகனம் பயன்படுத்தப் பட்டதாக அரசாங்க பகுப்பாய்வாளர் ஏ. ஆர். எல். விஜயசேகரா தெரிவித்தார்.

இத்தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனத்தில் ஒருவர் மட்டுமே இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

# மன்மோகன்சிங் புதிய நிதியமைச்சர்

(புதுடில்லி)

புதிய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்களின் பெயர்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அமைச்சுக்களின் விபரங்களும் வருமாறு:

டாக்டர் மன்மோகன் சிங் நிதி அமைச்சர், எஸ். பி சவான் உள்துறை அமைச்சர், டாக்டர் பலராம் ஜாக்கர் விவசாய அமைச்சர், மாதவ்சிங் சோலங்கி வெளியுறவு அமைச்சர், அர்ஜுன்சிங் சமூகநல அபிவிருத்தி அமைச்சர், சீதாராம்கேசரி நலலன்புரி அமைச்சர், சி.கே.ஜாபர்ஷரீப் ரயில்வே அமைச்சர், மாதவராவ் சிந்தியா சிவில் விமான போக்குவரத்து அமைச்சர், விஜய பாஸ்கரரெட்டி நீதி அமைச்சர், குலாம்நபிஆஸாத் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர்.

# அங்கவீனர்விபரம் திரட்டப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் யாழ். மாவட்டத்தில் உள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் உள்ள அநாதைக் குழந்தைகள், விதவைகள், ஊனமடைந்தவர்கள், வலதுகுறைந்தவர்கள் ஆகியோரின் விபரங்களைப் புள்ளி விபர அடிப்படையில், தங்கள் அங்கத்தவர்கள் மூலம் தற்போதுதிரட்டி வருகிறது. (153)

## ஒரு துப்பாக்கியுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு கொண்டுவரவும் மாட்டேன்.

இன்றைய யுத்தம் வடக்கு கிழக்கில் மட்டுமல்ல, நாட்டின் சகல பகுதிகளெங்கும் பரவியுள்ளது. ஒரு துப்பாக்கியுடன் ஆரம்பித்த இந்தப் போராட்டம் இன்று வாகனத்தில் வெடிகுண்டு கொண்டு சென்றுதகர்க்குமளவுக்கு வியாபித்திருக்கிறது.

ஆயுதத்திலும் யுத்தத்திலும் எமக்கு நம்பிக்கையில்லை. சகலஇன மக்களுக்கும் ஏற்ற விதத்தில் நீதியான நியாயமான முறையில் பிரச்னையை தீர்க்க விரும்புகிறேன்.

வன்முறையை விட்டு அகிம்சை வழியில் பிரச்சனையைத் தீர்ப்போம். இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு எல்லாத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

## தற்கொலைப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிசாரினால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்த 100 பேரின் சாட்சியங்களும் குண்டு வெடிப்பு இடம்பெற்ற சுற்றாடலிலுள்ள வசிப்பிடங்களைச் சேர்ந்த 200 பேரின் சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பாகபுலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

கடந்த மார்ச் மாதம் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன கொல்லப்பட்டதற்கு காரணமாக இருந்த வெடிகுண்டை விட கூட்டுப்படைத் தலைமையக முன்பாக வெடிக்கவைக்கப்பட்ட வெடிகுண்டு இருமடங்கு சக்தி வாய்ந்தது என்று புலனாய்வுப்பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

பூர்வாங்க விசாரணைகளின்படி தற்கொலைப் படைவாகனத்தில் வெடிகுண்டை ஏற்றிக்கொண்டு கூட்டுப்படை தலைமையகத்திற்கு கொண்டு சென்றிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (மா)

## நஷ்டஈடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திக்கு கிடைத்துள்ளது.

இதில் இதுவரை 334 விண்ணப்பங்களுக்குநஷ்டஈடு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 30 லட்சம் ரூபா நிதி நஷ்ட ஈடாக வழங்கப்பட்டுள்ளது. (153)

## பாதுகாப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சின் முக்கிய அலுவலகங்கள், இராணுவ, கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் பிரிவுகளின் முக்கிய கேந்திர நிலையங்களைத் தலைநகரில் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றியமைப்பது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்திற்குப் பின்னர், தலைநகரின் எந்தப் பகுதியிலும் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறலாம்எனவும், பாதுகாப்பு அமைச்சின் முக்கியமான கேந்திர நிலையங்கள் இத்தாக்குதல்களுக்கு இலக்காலாம் எனவும் அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

பொதுமக்களும் வாகனங்களும் செல்வதற்குத் தடைவிதிக்கக்கூடிய இடங்களுக்கு இந்த நிலையங்களை எடுத்துச் செல்வது பற்றி தற்போது ஆராயப்பட்டு வருவதாக அறியவந்துள்ளது.

## ஆயுதந்தாங்கிய

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலரை வருத்திக் கொள்ளையில் ஈடுபட்டிருந்த இக்கொள்ளைக் கோஷ்டியின் தலைவன் கண்ணன் என்று அழைக்கப்படும் ஜெயராசா நந்தகுமார் (வயது 28) என்பவர் சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் எனத் தெரியவருகிறது.

இக்கொள்ளைக் கோஷ்டியில் இருபதுக்கு மேற்பட்டோர் அங்கம் வகிக்கிறார்கள் என்றும், பத்துக்கு மேற்பட்ட கொள்ளைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும், இவர்களின் கைவரிசைகள் யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் நடைபெற்றதாகவும் அறியப்படுகிறது.

இக்கோஷ்டியினரில் அநேகமானோர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், இவர்களிடம் இருந்து தானியங்கித் துப்பாக்கி, கைத்துப்பாக்கி, கைக்குண்டுகள் என்பன மீட்கப்பட்டுள்ளதாகவும், கொள்ளையடிக்கப்பட்ட பணம், (பவுண்) நகைகள் என்பவற்றில் பெரும்பகுதி மீட்கப்பட்டுவிட்டதாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# மினிபஸ் விபத்து

[யாழ்ப்பாணம்]

நேற்று முன்தினம் பருத்தித்துறை வீதி சிறுப்பிட்டியில் மினிபஸ்ஸில் மிதிபலகையில் பிரயாணம்செய்த இளைஞர் ஒருவர் தவறுதலாக வீழ்ந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று அதிகாலை மரணமானார்.

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த செல்வரட்ணம் சிவகுமார் என்ற 18 வயது இளைஞரே மரணமானவராவர். [56]

# றோந்து தீவிரம்

[வடமராட்சி]

வல்வைக் கடற்பிராந்தியத்தில் கடற்படையினர் தீவிர றோந்து சேவையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

மேலும் இவர்களின் நடமாட்டவேளைகளில் ஆட்லறி செஷல்லும் மக்கள் குடியிருப்புகளை நோக்கி ஏவப்படுகின்றன. இதன் காரணமாக கரையோர மக்கள் பெரும்பதற்றத்துடனேயே வாழ்கின்றார்கள். (51)

# வாழை நார் பயிற்சி வகுப்பு

(வேலணை)

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினரால் ஏற்பாடுசெய்யப்பட்ட வாழை நாரிலான பொருட்கள் செய்யும் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு பயிற்சி பெற்றவர்களும், பயிற்சி பெற விரும்புவோர்களும் நாளை 25-ஆம் திகதி நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [75]

## 2 பொதுமக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

40 இராணுவத்தினர் இச்சம்பவத்தில் உயிரிழந்திருக்கக் கூடும் எனவும் அவ் அறிக்கை தெரிவித்துள்ளது. [க]

## பலாலியிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் தாக்குதல்கள் சிறிலங்கா இராணுவத்தால் நடத்தப்பட்டது.

இருபதுக்கும் மேற்பட்ட ஐந்து அங்குல ஷெல்களும், பத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கி ஷெல்களும் கட்டுவன் சந்திக்கு அருகில் விழுந்து வெடித்து பெரும் சேதத்தை விளைவித்துள்ளது. [மா-56]

## புலிகளின்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

கடந்த 21-ந் திகதி பிராமணாளங்குளத்திலிருந்து பறையனாலங்குளம் ஊடாக கூழாங்குளம் என்ற இடத்திற்குச் சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் ஆண்டியா புளியங்குளம் ஊடாக மன்னார் மதவாச்சி பிரதான வீதிக்கு சென்றனர்.

மன்னார் – மதவாச்சி பிரதான வீதி வழியாக செட்டிகுளம் முகாமுக்கு இராணுவத்தினர் சென்றுள்ளனர்.

ஆண்டியாபுளியங்குளத்தில் விடுதலைப் புலிகளின் மிதிவெடிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் சிக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. (மா)

இக்கொள்ளைகளுக்குப் பாவிக்கப்பட்ட ஆயுதங்கள், சமூக விரோதக் கும்பல்களிடம் இருந்து பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under licence Number B/100306/81